DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C No. 87/2021 |
| Deposition of witness | : | P.W – 2 |
| Name | : | மணிமன்னன் |
| Father's /Husband Name | : | அமிர்தலிங்கம் |
| Village | : | வலங்கைமான் |
| Taluk | : | வலங்கைமான் |
| Age | : | 61 |
| Occupation | : | வட்டாட்சியர் (ஓய்வு) |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 05th day of March, 2025.
Accused absent petition u/s 355 BNSS filed and allowed.

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும்அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

நான் புகார் அளிப்பது தொடர்பாக எனது உயர் அதிகாரிகளுக்கு தகவல் அளித்தேனா என்றால் அளித்தேன். எனது மேலதிகாரிகளிடம் புகாரில் மேலொப்பம் வாங்கி புகார் அளிக்கவில்லை என்றால் சரிதான். அலுவல் சம்பந்தமாக பிரச்சனை ஏற்பட்டு புகார் அளிக்கவேண்டியிருந்தால் மேலொப்பம் பெற வேண்டுமென்று எனக்கு தெரியுமா என்றால் அவ்வாறு வாங்க வேண்டிய அவசியமில்லை. அலுவலகத்தில் பணியாளர்கள் எங்கு எங்கு என்ன என்ன பணிகளுக்கு செல்கிறார்கள் என்று பதிவு செய்ய நகர்வு பதிவேடு உள்ளது என்றால் சரிதான். அந்த பதிவேட்டினை இவ்வழக்கில் அளிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவ தினத்தன்ற நான் பணியில் இருந்ததற்கான ஆவணம் ஏதேனும் போலிசாருக்கு அளிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் மணல் திருட்டு அதிகமாக நடந்துகொண்டிருந்தது என்றால் சரிதான். நான் மணல் திருட்டு வழக்கு சம்பந்தமாக நன்னிலம் காவல் நிலையத்தில் வேறு ஏதேனும் புகார் அளித்துள்ளேனா என்றால் இல்லை. எனது மேலதிகாரியின் வேண்டுகோளுக்கிணங்கவும், புள்ளி விபர கணக்குகளுக்காகவும் இவ்வழக்கின் புகாரை பொய்யாக அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எதிரி என்னை திட்டி மிரட்டி எனது அரசு பணியை தடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி என்னை தாக்கியதாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் பொது மக்கள் சுமார் பத்து நபர்கள் இருந்தார்கள். நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் தொடர்பில்லை என்றால் சரியல்ல.

(ஒம். M.S. பாரதிதாசன்)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், நன்னிலம்.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C No. 87/2021 |
| Deposition of witness | : | P.W – 3 |
| Name | : | பிரகாஷ்கண்ணா |
| Father's /Husband Name | : | சுப்ரமணியன் |
| Village | : | நீலக்குடி |
| Taluk | : | வலங்கைமான் |
| Age | : | 38 |
| Occupation | : | கிராம நிர்வாக அலுவலர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 05th day of March, 2025.
Accused absent petition u/s 355 BNSS filed and allowed.

<u>சாட்சி மனுவின் பேரில் மீண்டும்அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.</u>

சம்பவம் நடந்ததாக கூறப்படும் கிராமத்தில் நான் எத்தனை ஆண்டுகளாக பணி செய்தேன் என்றால் மூன்று வருடங்கள் பணி செய்தேன். எனக்கு ஒரு உதவியாளர் உள்ளார். எனக்கு பணி வருகை பதிவேடும், நகரும் பதிவேடும் உண்டு என்றால் இல்லை. யாதாஷ் என்ற பதிவேடு எனது அலுவலகத்தில் உள்ளது என்றாலும், அந்த பதிவேட்டில் கிராமத்தில் நடக்கும் குற்ற சம்பவங்கள் பற்றி பதிவிடுவது வழக்கம் என்றாலும், இவ்வழக்கு சம்பவம் தொடர்பாக அவ்வாறான பதிவு எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சம்பவம் நடந்த நாளாக கூறப்படும் நாளன்று நான் பணியில் இருந்ததற்கு ஆவணம் ஏதேனும் அளித்துள்ளேனா என்றால் இல்லை. அ.சா.1 எங்கள் துறை உயரதிகாரி என்பதால் அவருக்கு ஆதரவாக சம்பவத்தை நேரில் பார்த்ததாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் தொடர்பில்லை என்றால் சரியல்ல.

(ஒம். M.S. பாரதிதாசன்)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், நன்னிலம்.